# வினா விடை 2

## புனித பவுல் அடிகள் திருமுகம்

### எபேசியர் முதல் எபிரேயர் வரை

**1. கடவுள் எப்பொழுது கிறிஸ்துவுக்குள் நம்மை தெரிந்து கொண்டார்?**

*அ. உலகம் உருவாகுமுன்னரே*

ஆ தாயின் வயிற்றில் நம்மை உருவாக்குமுன்னரே

இ. சிலுவையில் அவர் சாகுமுன்னரே

ஈ. முதல் புதுமை செய்யும் முன்னரே

**2. இரக்கப் பெருக்கமுள்ள யார் கிறிஸ்துவோடு நாம் உயிர் பெறச் செய்தார்.?**

அ. வானதூதர்

ஆ. இறைவாக்கினர்

*இ. கடவுள்*

ஈ. பவுல் அடிகள்

**3. எந்த அடித்தளத்தில் கடவுளின் குடும்பத்தின் உறுப்பினராகிய நீங்கள் கட்டப்பட்டிருக்கின்றிர்கள் ?**

அ. மூலைக்கல்லாகிய கிறிஸ்துவோடு வானதூதர்கள் மற்றும் புனிதர்களை அடித்தளமாகக்கொண்டு

*ஆ. மூலைக்கல்லாகிய கிறிஸ்துவோடு திருத்தூதர்கள் மற்றும் இறைவாக்கினர்களை அடித்தளமாகக்கொண்டு*

இ. மூலைக்கல்லாகிய கிறிஸ்துவோடு கடவுள் மற்றும் தூய ஆவியாரை அடித்தளமாகக்கொண்டு

ஈ. மேற்கண்ட யாருமில்லாமல்

**4. புறவினத்தார்களின் அறிவு இருளடைந்து கடவுள் தொடர்பில்லாமல் வாழ்ந்தது ஏன் ?**

அ. மோசேயின் சட்டத்தை பின்பற்றாததால்

ஆ. ஆவியை விட உடல் இச்சையை விரும்பியதால்

*இ. அறியாமை மற்றும் கடின இதயங்கள் கொண்டிருந்ததால்*

ஈ. இயேசுவை வெறுத்ததால்

**5. “கோபம் கொண்டாலும் பாவம் செய்யாதீர்கள், பொழுது சாய்வதற்குள் கோபம் தணியட்டும், அலகைக்கு இடம் கொடாதீர்கள்” யார் யாரிடம் கூறியது?.**

*அ. பவுல் எபெசியரிடம்*

ஆ. பவுல் பிலிப்பியரிடம்

இ. இயேசு பவுலிடம்

ஈ. இயேசு .பரிசெயர்களிடம்

**6. கணவன், மனைவி, பிள்ளைகள், அடிமைகள் மற்றும் எஜமானர்களிடம் அன்பும், மரியாதையும் கொண்டிருக்கவேண்டும் என்று பவுல் அடிகள் எந்த கடிதத்தில் குறிப்பிடுகிறார்.?**

அ. கொலோசியர் மற்றும் பிலிப்பியர்

ஆ. 1 தேசலோனியர் மற்றும் பிலிப்பியர்

*இ. கொலோசியர் மற்றும் எபேசியர்*

ஈ. 2 தேசலோனியர் மற்றும் எபேசியர்

**7. ‘கடவுளின் கேடயம்’ வரிசையில் பவுல் அடிகள் குறிப்பிடுவது எது ?**

*அ. ‘மீட்பின் தலைக்கவசத்தையும் கடவுளின் வார்த்தையாகிய ஆவியின் வாளையும் எடுத்துக் கொள்ளுங்கள்’*

ஆ. ‘பிள்ளைகளின் கோபத்தை தூண்டாதீர்கள்; ஆனால் அவர்களை ஒழுக்கத்தில் வளர்த்துங்கள்’

இ. ‘ஆவியின் சமாதானம் மற்றும் ஒற்றுமை ஆகியவற்றை கடைப்பிடிக்க எல்லா முயற்சியையும் எடுங்கள்’

ஈ. மேற்கண்ட எல்லாமுமே

**8. ‘உங்களை நினைக்கும்போதெல்லாம் மகிழ்ச்சியுடன் செபித்து கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன்.’. யார் யாரிடம் கூறியது?**

அ. பவுல் கொலோசியரிடம்

*ஆ. பவுல் பிலிப்பியரிடம்*

இ. தெசலோனியர் பவுலிடம்

ஈ. திமோத்தி பவுலிடம்

**9. ‘மகிழுங்கள்’ என்ற வார்த்தையை எந்த திருமுகத்தில் பவுல் அடிகள் அடிக்கடி குறிப்பிடுகிறார் ?**

அ.  1 திமோத்தி

*ஆ.  பிலிப்பியர்*

இ.  கொலோசியர்

ஈ.  1 தேசலோனியர்

**10. பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் இயேசுவின் தாழ்ச்சியை பவுல் அடிகள் எவ்வாறு விளக்குகிறார்.?**

அ. கடவுள் தன்மையில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாக இருக்கும் நிலையை விடாமல் பிடிக்க விரும்பவில்லை

ஆ. அடிமையின் தன்மை கொண்டு தன்னை வேறுமையாக்கினார்

இ. சாவுக்கு அதிலும் சிலுவை சாவையே ஏற்கும் அளவிற்கு கீழ்ப்படிபவரானார்.

*ஈ. மேற்கண்ட எல்லாமுமே*

**11. பவுல் அடிகளின் முந்தைய வாழ்க்கை இவ்வாறு விளக்கப் படுகிறது**

அ. கிறிஸ்துவை அன்பு செய்து, அவரை பார்க்கக் காத்திருந்து, பணி செய்ய விரும்பியவர்

*ஆ. விருத்தசேதனம் செய்தவர் ,பெஞ்சமின் குலத்தினர், பரிசேயர், எபிரேயர் மற்றும் துன்புறுத்தியவர்.*

இ. யூத மதத்தையும் மோசேயின் சட்டங்களையும் வெறுத்தவர்

ஈ. புறவினத்தவர், கிறிஸ்தவர்களை துன்புறுத்தியவர்.

**12. எப்பாபுரோடைட்ஸ் மூலமாக பவுல் அடிகளுக்கு பரிசு அனுப்பியவர் யார்?**

அ. தீத்து

ஆ. திமோத்தி

இ. கொலோசியன்

*ஈ. பிலிப்பியர்*

**13. “அவர் கட்புலனாகாக் கடவுளின் சாயல், படைப்புக்கெல்லாம் தலைப் பேறானவர்” பவுல் அடிகள் யாரைப் பற்றிக் கூறுகிறார்?**

அ. ஆதாம்

ஆ. அபிரகாம்

*இ. கிறிஸ்து*

ஈ. நோவா.

**14. மாற்கு மற்றும் பார்னபா இடையேவுள்ள உறவு என்பது**

அ. சகோதரர்

*ஆ. ஒன்றுவிட்ட சகோதரர்*

இ. எஜமான் மற்றும் அடிமை

ஈ. நெருங்கிய நட்பு

**15. எஜமானர்கள் ஏன் அடிமைகளை நீதியோடும் நியாயத்தோடும் நடத்த வேண்டும்?**

அ. கடவுள் முன் ஞானத்தோடு நடத்த

ஆ. மோசேயின் சட்டம் அவ்வாறு கூறுகிறது

இ. கடவுளும் அவர்களை நீதியோடும் நியாயத்தோடும் நடத்த

*ஈ. ஏனெனில் வானகத்தில் அவர்களுக்கு ஒரு எஜமான் இருப்பதால்*

**16. தேசலோனியர்கள் ஏன் சிலைகளை விட்டுவிட்டு கடவுளிடம் திரும்பினார்கள்?**

அ. ஆன்மிக தாகம் கொண்டு.

ஆ. இறை வார்த்தையை பெறுவதற்காக

*இ. உண்மையான கடவுளுக்கு ஊழியம் புரிவதற்காக*

ஈ. கடவுளின் ஆசீரையும் சுகத்தையும் பெறுவதற்காக

**17. பவுலடிகள் சில்வானுஸ் மற்றும் திமோத்தி ஏன் இரவும் பகலும் கடினமாக உழைத்தார்கள்?**

*அ. கடவுளின் நற்செய்தியை போதிக்கும்பொழுது அவர்களுடைய தேவைகளுக்காக யாருக்கும் சுமையாகக் கூடாது என்பதற்காக*

ஆ. புறவினத்தாரை சாராமல் அவர்கள் உழைக்க வேண்டும் என்பதை ஊக்குவிப்பதற்காக

இ. யூத அதிகாரிகள் அவர்களுடைய நோக்கத்தை சந்தேகிக்காமல் இருப்பதற்காக

ஈ. விசுவாசிகளின் முன் அவர்கள் தூய்மையும் நீதியும் மற்றும் குற்றமற்றவர்கள் என்பதை உணர்த்துவதற்காக

**18. தேசலோனியர்களின் விசுவாசத்தையும் அன்பையும் பற்றிய நல்ல செய்தியை யார் பவுலடிகளிடம் கொண்டு வந்தார்கள்?**

அ. சில்வானுஸ்

*ஆ. திமோத்தி*

இ. தீத்து

ஈ. மாற்கு

**19. முற்காலத்திலும் கடந்த நாட்களிலும கடவுள் எவ்வாறு பேசினார்?**

அ. மூதாதையர்களிடம் மோசே மூலமாகவும் நம்மிடம் அவர் மகன் மூலமாகவும்

*ஆ. நம் மூதாதையர்களிடம் இறைவாக்கினர்கள் மூலமாகவும் நம்மிடம் அவர் மகன் மூலமாகவும்*

இ. நம் மூதாதையர்களிடம் வானதூதர் மூலமாகவும் நம்மிடம் தூய ஆவியின் மூலமாகவும்

ஈ. கடவுள் எப்பொழுதுமே கனவுகள், காட்சிகள் வெளிப்பாடுகள் மற்றும் வானதூதர்கள் மூலமாகவும்

**20. பிலமோன் மற்றும் ஒனேசிமுஸ் இவர்களிடம் இருந்த உறவு எப்படிப் பட்டது?**

அ. நெருங்கிய நண்பர்கள்

ஆ. நெருங்கிய உறவினர்கள்

*இ. எஜமான் மற்றும் அடிமை*

ஈ. யூதன் புறவினத்தான் போன்ற

**21. மெல்கிசெதேக் என்றால் .........................சாலேம் அரசர் என்றால் ..........................என்று பொருள்.**

அ. எல்லா உலகங்களின் அரசர் மற்றும் சாலேம் மாவட்ட அரசர்

*ஆ. நீதியின் அரசர் மற்றும் சமாதானத்தின் அரசர்*

இ. வானதூதர்கள் மற்றும் புனிதர்களின் அரசர்

ஈ. மேற்கண்ட எதுவுமில்லை

**22. "நன்னடத்தையால் முன்மாதிரியாயும், போதிப்பதில் நலமிக்க வார்த்தைகளால் பெருந்தன்மை உள்ளவராயும் காட்டுங்கள்". பவுல் அடிகள் இதை யாருக்கு அறிவுறுத்துகிறார்?**

அ.. திமோத்தி

*ஆ. தீத்து*

இ. சீலா

ஈ. மேற்கண்ட எவருமில்லை

**23. இதை எங்கு வாசிக்கிறோம்? "சீரியதொரு பந்தயத்தில் ஓடினேன், ஓட்டத்தை முடித்துவிட்டேன்' விசுவாசத்தைக் காத்தேன்"**

அ. கொலோசியர்

ஆ. 1 தேசலோனியர்

இ. பிலிப்பியர்

*ஈ. 2 திமோத்தி*

**24. “கடவுள் நமக்கு கோழை உள்ளத்தை தரவில்லை. மாறாக........” இந்த வாக்கியத்தை நிறைவு செய்க.**

*அ. சக்தி, அன்பு, சுய ஒழுக்கம் உள்ள உள்ளத்தையே அருளினார்*

ஆ. பயம், வீண் ஆடம்பரம், தன்னலம் உள்ள உள்ளத்தையே அருளினார்.

இ. இளமை, தியாகம், கடின உழைப்பு உள்ள உள்ளத்தையே அருளினார்

ஈ. மேற்கண்ட எதுவுமில்லை

**25. நம்மை சகோதர, சகோதரிகளே என்றழைக்க இயேசு வெட்கப்படவில்லை. ஏன்?**

அ. மரியாவுக்கு இயேசுவைத் தவிர வேறு குழந்தைகள் இருந்ததால்

*ஆ. பரிசுத்தமாக்குபவர், பரிசுத்தமாக்கப்படுபவர்கள் அனைவருக்கும் ஒரே தந்தை இருப்பதால்*

இ. இயேசுவை சந்திக்க அவர் தாயும் சகோதரர்களும் வந்ததால்

ஈ. நம்பிக்கையாளர்களை சகோதர சகோதரிகளே என்றழைத்ததால்

**26. சொதனைக்கு உள்ளாக்கப் படுபவர்களுக்கு இயேசு எவ்வாறு உதவி செய்தார்?**

அ. அவர் இறைமகனாக இருந்ததால்

ஆ. புதுமைகள் செய்யும் சக்தி இருந்ததால்

*இ. அவரும் சொதனைக்கு ஆளாகி கஷ்டப்பட்டதால்*

ஈ. அவரும் அவர்களை சோதனைக்கு உள்ளாக்கியதால்

**27. எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில் இறைவார்த்தை எவ்வாறு விவரிக்கபபட்டுள்ளது?**

அ. படைப்பு சக்தி கொண்ட அதன் மூலமாக எல்லாம் உண்டாக்கப்பட்டது

*ஆ. உயிருள்ளது, ஆற்றல் மிக்கது; இரு பக்கமும் கூர்மையான வாளினும் கூர்மையானது*

இ. இறைவாக்கினர் பெசும்பொழுது உயிருள்ளது

ஈ. பலமொழி பேசும் வரம்பெற்றவர்களால் செயலாக்கம் பெறுகிறது

**28. யாருடைய முறைமைப்படி இயேசு குருவாக இருக்கிறார்.?**

அ. ஆரோன்

*ஆ. மெல்கிசெதேக்*

இ. நோவா

ஈ. மேற்கண்ட யாருமில்லை

**29. இயேசு யாருடைய மரபை சார்ந்தவர்?**

அ. பெஞ்சமின்

ஆ. மனாசே

*இ. யூதா*

ஈ. லேவி

**30. இயேசுவின் குருத்துவத்திற்கும் பிறருக்கும் உள்ள வேறுபாடு என்ன?**

அ. ஒவ்வொரு குருவும் அவர் பணி நிறைவேற்றுகின்றனர்

ஆ. பாவம் களையாத பலி ஒப்புக்கொடுக்கின்றனர்

இ. புனிதப்படுத்தும் பணி செய்கின்றனர்

*ஈ. மேற்கண்ட எல்லாமுமே.*

**31. பிதாப்பிதாவாகிய ஆபிரகாம் பத்தில் ஒரு பங்கை யாருக்கு கொடுத்தார்?**

அ. அவரோடு போருக்கு வந்தவர்களுக்கு

ஆ. அபிமலேக் அரசருக்கு

இ. கடவுளுக்கு

*ஈ. சாலேம் அரசருக்கு*

**32. "இவ்வுலகின் மீதுள்ளவற்றில் மனதை செலுத்தாமல் மேலுலகத்தின் மீது மனதை செலுத்துங்கள்" என்று பவுல் அடிகள் ஏன் கூறுகிறார்?**

*அ. "ஏனெனில் நீங்கள் இறந்து விட்டீர்கள். உங்கள் உயிர் கிறிஸ்துவோடு கடவுளுக்குள் மறைந்துள்ளது."*

ஆ. ஏனெனில் அங்கு அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்துள்ளது.

இ. ஏனெனில் வானதூதர்கள் உங்களை கவனித்து கொள்வார்கள். நீங்கள் ஆனந்தம் அடைவீர்கள்.

ஈ. மேற்கண்ட எல்லாமே

**33. பவுல் அடிகளை பொறுத்த மட்டில் "ஆண்டவர் எவ்வாறு வானிலிருந்து கீழே இறங்குவார்.?**

அ. அதிகாரத் தொனியோடு

ஆ. அதிதூதரின் அழைப்போடு

இ. எக்காளம் முழங்க

*ஈ. மேற்கண்ட எல்லாமே.*

**34. பவுல் அடிகள் தன கடிதங்களை இவ்வாறு முடிக்கிறார்**

அ. நான் இதை ஏன் கைப்பட எழுதுகிறேன்

ஆ. சகோதர சகோதரிகளே எனக்காக செபியுங்கள்

*இ. நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் அருள் உங்களோடு இருப்பதாக.*

ஈ. உங்களுக்காக கடவுளுக்கு நான் நன்றி செலுத்துகிறேன்

**35. "வேலை செய்ய விரும்பாதவன் உண்ணக்கூடாது " யார் யாரிடம் கூறியது?**

அ. இயேசு பவுலடிகளிடம்

*ஆ. பவுலடிகள் தெசலோனியரிடம்*

இ. பவுலடிகள் கொலோசியரிடம்

ஈ. பவுலடிகள் தீத்துவிடம்

**36. அரசர் மற்றும் உயர்ந்த பதவியில் இருப்பவர்களுக்காக செபிக்க வேண்டுமென்று பவுலடிகள் கேட்பதற்கு காரணம் என்ன?**

*அ. நாம் பக்தியும் ஒழுக்கமும் உடையவர்களாக அமைதியான வாழ்வு நடத்த வேண்டி*

ஆ. அவர்கள் நாட்டை பிளவு படுத்தி போர் செய்யாமலிருப்பதற்காக

இ. உடல் இச்சையினால் சோதனைக்கு உள்ளாகமலிருப்பதற்காக

ஈ. உடல் நலமும் நீண்ட ஆயுளும் பெறுவதற்காக

**37. "ஒருவனுக்கு தன குடும்பத்தையே ஆண்டு நடத்த தெரியாதிருந்தால் .........."**

*அ. கடவுளின் சபையை எவ்வாறு கண்காணிக்க முடியும்*

ஆ. அப்போஸ்தலர்களை எவ்வாறு கவனிக்க முடியும்

இ. கடவுளின் அரசை கண்காணிக்க முடியும்

ஈ. சேமித்த பணத்தை எவ்வாறு கண்காணிக்க முடியும்

**38. "ஆண்டவரின் நாள் எப்படி வரும்?**

அ. இடி மின்னலோடு வரும்

ஆ. வானதூதர்கள் அறிவிப்பதால் வரும்

இ. உலக அழிவுக்குப்பின் வரும்

*ஈ. இரவில் திருடனைப்போல் வரும்*

**39. பவுல் அடிகள் எதை குப்பை எனவும் இழப்பு எனவும் கருதுகிறார்?**

அ. புறவினத்தாரோடுவுள்ள உறவு

*ஆ. தான் பெருமையாகக் கருதிய கடந்தகால வாழ்க்கை*

இ. எதிரிகளால் பட்ட கஷ்டங்கள்

ஈ. பரிசேயர் மற்றும் சதுசேயருடன் உள்ள நட்பு

**40. கிறிஸ்துவின் உடல் ஒற்றுமை என்பது**

*அ. ஒரே ஆண்டவர், ஒரே நம்பிக்கை, ஒரே திருமுழுக்கு, ஒரே கடவுள்*

ஆ. தூய நற்கருணை மூலமாக கிறிஸ்து உடலின் ஒற்றுமை

இ. யூதர்களையும் புறவினத்தாரையும் அன்பு செய்வது.

ஈ. திருச்சபையில் ஏழை பணக்காரர் என்ற வேறுபாடு கிடையாது